செ.வெ.எண்: 427

# பத்திரிக்கை செய்தி

நாள்: 08/07/2016

இராணுவத்திற்கான ஆள்சேர்க்கை முகாம் 02.08.2016 முதல் 10.08.2016 வரை இராமநாதபுரம், சீதக்காதி சேதுபதி ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது. மேற்படி முகாமில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து இந்திய இராணுவத்தில் சிப்பாய் (Technical), சிப்பாய் நர்சிங் அசிஸ்டன்ட், சிப்பாய் (பொதுப்பணி), சிப்பாய் (தொழில் நுணுக்கம் அறிந்தவர்) மற்றும் சிப்பாய் கிளார்க் ஸ்டோர் கீப்பர் டெக்னிக்கல் மற்றும் D.S.C ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் 18.06.2016 முதல் 17.07.2016 வரை பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பிறகு அதில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை கொண்டு தாங்கள் எந்த பிரிவிற்கு தகுதியுள்ளவர்கள் என்பதை அறிந்து விண்ணப்பிக்க வேண்டும். சான்றிதழ் சரிபார்க்கும் நாள், உடற் தகுதி தேர்வு மற்றும் மருத்துவ பரிசோதனை போன்றவைகள் முகாம் நடக்கும் இடத்தில் மேற்கொள்ளப்படும். இந்த விபரங்கள் அழைப்புக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்படும். அழைப்புக் கடிதம் 17.07.2016-ம் தேதிக்கு மேல் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அழைப்புக் கடிதத்தின் பிரதி எடுத்து அதில் குறிப்பிட்டுள்ள நாளில் இராமநாதபுரம், சீதக்காதி சேதுபதி ஸ்டேடியத்திற்கு விடிகாலை 1.00 மணிக்கு வரவேண்டும்.

## இராணுவ ஆட்சேர்ப்பு முகாமிற்கு விண்ணப்பதாரர்கள் கொண்டு வர வேண்டிய ஆவணங்கள்

1. முகாமிற்கு வருபவர்கள் கீழ்கண்ட அசல் சான்றிதழ்களை கொண்டு வருதல் வேண்டும். சான்றிதழ்கள் லேமினேட் செய்யப்பட்டும், வரிசைப்படுத்தப்பட்டும், நகல்கள் கெசட்டட் அலுவலரால் ஒப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும். ஒப்பமிடுபவரின் இரப்பர் ஸ்டாம்ப் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். பிறந்த தேதி, மார்க் சீட், பெற்றோர் பெயர், பள்ளி பெயர், இருப்பிட சான்று, சாதிச் சான்று, மாற்று சான்றிதழ், 10-வது சான்றிதழ் போன்ற அனைத்திலும் இரப்பர் ஸ்டாம்ப் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.

(அ) எஸ்.எஸ்.எல்.சி மதிப்பெண் சான்று

(ஆ) இன்டர்மீடியேட் மதிப்பெண் சான்று

(இ) பட்டப்படிப்பு மதிப்பெண் சான்று

(ஈ) தாசில்தார் அவர்களிடமிருந்து பெற்ற இருப்பிட சான்றிதழ் (6 மாதங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். சான்றிதழில் வீட்டு முகவரி அடித்தல், திருத்தல் ஏதுமின்றி தெளிவாக இருக்க வேண்டும். உயரத்திற்கான தளர்வு விண்ணப்பதாரரின் குடும்பம் 2 அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறைகளாக அந்த மண்டலத்தில் இருப்பதை பொறுத்தது. இந்த விஷயத்தில் மேற்படி சான்றிதழ் உரிய முறையில் குறிப்பிட்ட மண்டலத்தாரின் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும்)

(உ) அனைத்து விண்ணப்பதாரரும் இ-கவர்மென்ட் இருப்பிட சான்றிதழ் அல்லது இணைக்கப்பட்ட இருப்பிட சான்றிதழ் எடுத்து வர வேண்டும். மற்ற இருப்பிட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) கடைசியாக படித்த கல்வி நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட படித்த மற்றும் நடத்தை சான்றிதழ்.

(எ) கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் (ஆங்கிலத்தில்) (6 மாதங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும்)

(ஏ) விண்ணப்பதாரர்கள் ஆங்கிலத்தில் தங்களது இருப்பிட சான்றிதழ், சாதிச் சான்றிதழ், தனித்துள்ள புகைப்படமும், அப்பகுதி தாசில்தாரின் அலுவலக முத்திரை பதித்து கொண்டு வரவேண்டும். அதில் ஆங்கிலத்தில் இந்த சான்றிதழ் இராணுவ நுழைவுத் தேர்விற்காக வழங்கப்பட்டது என்று எழுதப்பட்டு முத்திரை பதித்திருத்தல் அவசியம். அனைத்து விண்ணப்பதாரரும் இ-கவர்மென்ட் இருப்பிட சான்றிதழ் அல்லது இணைக்கப்பட்ட இருப்பிட சான்றிதழ் எடுத்து வர வேண்டும். மற்ற இருப்பிட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது மற்றும் அடுத்த கட்ட தேர்விற்கும் அனுமதிக்க இயலாது.

(ஐ) மெட்ரிகுலேஷன் கல்வி தகுதி இல்லாத விண்ணப்பதாரர்கள் இடமாற்றச் சான்றிதழ் மாவட்ட கல்வி அதிகாரியிடம் கையொப்பம் பெற்றும், மதிப்பெண் சான்றிதழ் பள்ளி முத்திரையுடனும், தலைமையாசிரியர் கையொப்பத்துடனும் இணைக்க வேண்டியது. (SOL Tdn-8வது தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும்)

(ஒ) Sports / NCC சான்றிதழ்கள்

(ஓ) விண்ணப்பதாரர்கள் படைவீரர்கள், முன்னாள் படைவீரர்களின் மகன்கள் / விதவைகளின் மகன்கள் / போரில் இறந்த படை வீரர்களின் மகன்களாக இருந்தால் அவர்கள் உரிய Concerned Record Office-ல் இருந்து Relationship Certificate வாங்கி வர வேண்டும். பர்சனல் நெம்பர், ரேங்க், பெயர், அப்பாயிண்ட்மெண்ட் மற்றும் ஆபீஸ் ஸ்டாம்ப் உடன் இணைக்கப்பட வேண்டும். Ex-servicemen Board / OC / COல் பெறப்பட்ட Relationship Certificate ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஔ) சமீபத்தில் எடுக்கப்பட்ட 12 கலர் பாஸ்போர்ட் 34×45 mm சைஸ் புகைப்படம் எடுத்து வரவேண்டும். (3மாதத்திற்கு முன்னால் உள்ள போட்டோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

2. NCC 'C' சான்றிதழ் உள்ளவர்கள் Solider GD & Soldier Tdn போன்ற பதவிகளுக்கு சிப்பாய் பொதுப்பணி Common Entrance Examination (CEE) தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.
3. NCC 'C' சான்றிதழ் உள்ளவர்களுக்கு எழுத்துத் தேர்வில் 15 மதிப்பெண்கள் கூடுதலாக அளிக்கப்படும். (Soldier Tech, Soldier Nursing Assistant and Clk / SKT).
4. தேர்வு என்பது விண்ணப்பதாரர்களின் சான்றிதழ் சரிபார்த்தல், உடற்தகுதி தேர்வுகள், உடற்தகுதி அளவெடுத்தல், மருத்துவ தேர்வு மற்றும் எழுத்து தேர்வு ஆகிய அனைத்தும் உள்ளடக்கியது.
5. விண்ணப்பதாரர்கள் அதிகாலை 1-00 மணிக்கு வரவேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் தங்களுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் உணவு பொட்டலங்களை எடுத்து வரவும்.
7. திருமணமானவர்களின் விண்ணப்பங்கள் 21 வயது பூர்த்தி அடையவில்லை என்றால் அவர்கள் பங்கு பெற தகுதியற்றவர்கள் ஆவார்கள்.
8. மருத்துவத் தேர்வு: மருத்துவ தேர்விற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இராணுவ ஆட்சேர்ப்பு மைதானத்தில் நடைபெறும் விண்ணப்பதாரர்கள் அவர்களாகவே

தங்களுக்கு ஏதேனும் சிறிய நோய்கள் அதாவது பல் நோய்கள், தோல் நோய்கள், ஹெர்னியா, ஹைட்ரோசில், DNS (nose), குடல் நோய்கள் இருக்கின்றதா என சரிபார்த்து வரவேண்டும். காதுகளுக்கு Wax clean செய்து வர வேண்டும். PFT/PMT விண்ணப்பதாரர்கள் முகாம் நடைபெறும் அன்றே மருத்துவ சோதனைக்கு தயாராக வேண்டும்.

9. விண்ணப்பதாரர்கள்18 வயது பூர்த்தி அடையாதவர்கள் கட்டாயம் பெற்றோர் சம்மத சான்றிதழ் வாங்கி வர வேண்டும்.
10. போலி சான்றிதழ்கள் கொடுப்பது மற்றும் தவறான வாக்குறுதிகளை அளிப்பவர்கள் தேர்ச்சியிலிருந்து விலக்கப்படுவார்கள். மேலும் குற்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.
11. பச்சை குத்தியிருப்பது: கையின் மேல்புறத்தில், மணிக்கட்டின் உட்புறத்தில், உள்ளங்கைக்கு மேற்புறத்தில் மட்டும் பச்சை குத்தியிருப்பவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். மற்ற இடங்களில் பச்சை குத்தியிருப்பவர்கள் தகுதி தேர்விலிருந்து நீக்கப்படுவார்கள். பழங்குடியினர் முகத்திலோ அல்லது உடம்பிலோ அவர்களது மரபுக்கும் பழக்கத்திற்கும் உட்பட்டு அனுதிக்கப்படுவார்கள்.
12. ஊக்க மருந்து எடுத்துக் கொண்டிருப்பவர்கள் தகுதிச்சுற்றிலிருந்து விலக்கப்படுவார்கள்.
13. Common Entrance Examination (CEE) தேர்வில் தவறான விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.
14. தகுதித்தேர்வின் போது ஏற்படும் காயம் மற்றும் உயிரிழப்பிற்கு இராணுவம் பொறுப்பேற்காது. அவரவர் சொந்த பொறுப்பில் பங்கேற்க வேண்டும்.
15. அனைத்து சான்றிதழ்கள், மதிப்பெண் பட்டியல்களிலும் பிறந்த தேதி, பெற்றோர் பெயர், ஒரேமாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும். அனைத்து ஆவணங்கள், ரப்பர் ஸ்டாம்புகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும்.

ஒம்/- சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

// உண்மை நகல் // உத்தரவுப்படி //

[signature] 2/3

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
கன்னியாகுமரி மாவட்டம்.

9/7/16.